**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஐப்பசித்திங்கள் 08 ம் நாள்

**இ.ம.எண். 3/2025**

**in**

**அ.வ.எண். 205/2022**

1. M.சின்னசாமி
2. K.சாமிநாதன்
3. P.சாமிநாதன்
4. D.பாலசுப்பிரமணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. K.P.குமாரசாமி
2. K.K.அருண்குமார்

(Amended as per order in I.A.No.2/2024 dated 05.08.2024)

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.09.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தங்கமணி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து சர்வேயர் உதவியுடன் தாவா/மனு சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) மனுதாரர்கள்/வாதிகள் மனு/தாவா சொத்தான தடத்தை பொதுவில் அனுபவித்து வரும் கூட்டுபாகஸ்தர்கள் ஆகும். 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆவார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் பூமி மனு/தாவா தடத்திற்கு வடபுறமாக உள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் குடியிருக்கும் க.ச. 885 பூமியிலிருந்து க.ச. 886, க.ச.887, க.ச.882 காலைகளில் அத்துக்குள் மனு/தாவா தடம் செல்கிறது. க.ச. 886, க.ச.887, க.ச.882 பூமிகள் பொதுவில் பாத்தியப்பட்டு பொது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததில் பாகஸ்தர்கள் தங்களுக்குள் கடந்த 09.08.1988ம் தேதியில் பாகக்கரார் செய்து கொண்டார்கள்.

ii) பாகக்கரார் செய்யும் பொழுதே க.ச. 885 பூமியில் இருந்து க.ச. 886 பூமியின் வடகோட்டு அத்தில் 23 லிங்ஸ் (15 அடி) அகலத்தில் கிழமேலாக க.ச. 887 காலை மேற்கோட்டு அத்து வரையிலும் அதன் தொடர்ச்சியாக க.ச. 887 காலையின் மேற்கோட்டு அத்தில் வடக்கே க.ச.882 காலை வரை பாகஸ்தர்கள் தடம் அமைத்து தங்களுக்குள் பாகம் பிரித்து அந்தப்படியே க.ச.885 காலையிலிருந்து கிழக்கே சென்று பின்பு க.ச.887 காலையில் வடக்கே 882

காலை வரை அவரவர் பாகங்களுக்கு பாகக்கரார் தேதியிலிருந்து அனுபவித்து வருகிறார்கள். மனு/தாவா தடம் நிலையான அத்துக்குள் அமைந்தும் பாகஸ்தர்கள் தங்களுக்குள் பொது தடமாக நடந்து அனுபவித்து வருகிறார்கள். மனு/தாவா தடத்தை பாகக்கரார் தேதிய பாகஸ்தர்கள் அனுபவித்து வந்து பின்னிட்டு அவர்களின் வாரிசுகளான மனுதாரர்கள்/வாதிகள் மனு/தாவா தடத்தை தங்களுக்குள் எந்தவித இடையூறும் இல்லாமல் அனுபவித்து வருகிறார்கள். மனு/தாவா தடம் பொருத்து பாத்திய அனுபவத்தில் மனுதாரர்கள்/வாதிகள் தங்களுக்குள் எவ்வித இடையூறும் ஆட்சேபனையும் இருந்தது இல்லை.

iii) மனு/தாவா தடம் அமைத்துள்ள க.ச. 886 பூமியின் வடபுறமும் க.ச.887 காலையின் மேபுறமும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட க.ச.883 காலை பூமி உள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் பேரில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் பூமியை மனுதாரர்கள்/வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதாக பொய்யாக நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அ.வ.எண். 21/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகள் பேரில் தாவா நிலுவையில் உள்ளதை பயன்படுத்தி மனுதாரர்கள்/வாதிகளின் தாவா தடத்தை இடைஞ்சல் செய்து தங்கள் பூமியுடன் சேர்த்து ஆக்கிரமித்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 10.09.2022 தேதியில் தாவா தடத்தில் அத்துமீறி நுழைந்து மனு/தாவா தடத்தின் வடபுறத்து மற்றும் மேபுற நிலையான அத்துக்களை அழித்து கம்பிவேலி அமைக்க எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முயற்சி செய்தார்கள்.

iv) மனு/தாவா தடம் க.ச.886, க.ச.887 பூமி அத்துக்குள் அமைந்துள்ளது. மனு/தாவா தடத்திலோ க.ச.886, க.ச.887, க.ச.882 பூமிகளில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு யாதொரு பாத்தியமும் அனுபவமும் எப்போதும் இல்லை. எனவே மனு/தாவா சொத்தில் மனுதாரர்கள்/வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை இடைஞ்சல் செய்யும் வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யும் நடவடிக்கையை தடுக்கவும் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தும் வகையில் மேற்படி மனு/தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து சர்வேயர் உதவியுடன் தாவா/மனு சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம் :–</u>**

i) மனுதாரர்கள் மனு பொய். சட்டப்படியும் நியாயப்படியும் மனுவில் கண்டுள்ள சங்கதிகளின்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்யவேண்டியது.

ii) க.ச.883A, பு.ஏ.10.22 இதற்கு ரீ.ச.883/A5–ல் பு.ஏ.5.26 சென்ட் விஸ்தீரண பூமியும், இதர பூமிகளும் எதிர்மனுதாரர்களுக்கு பூர்வீக வகையில்

பாத்தியப்பட்டு இருந்து வந்ததை பொறுத்து கடந்த 07.11.2001-ம் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் பிரிந்த சி செட்யூல் சொத்தின் சுவாதீனத்தை பெற்று தனிப்பட அனுபவித்து வருகிறார். மேற்படி சி செட்யூல் சொத்தில் ஒரு பகுதி சொத்தான ரீ.ச.883/A5 உள்ள பு.ஏ.5.26 விஸ்தீரண பூமி உள்ளது. மேற்படி பூமிக்கு தென்புறத்தில் க.ச.886 காலையும் கிழபுறத்தில் க.ச.887, க.ச.882 காலையும் உள்ளது. மேற்படி காலைகளின் வடக்கோரத்தில் கிழமேலாகவும் எதிர்மனுதாரர்களின் பூமிக்கு கிழபுறத்தில் தென்வடலாக பாதி அளவிற்கு தடமுள்ளதாக மனுதாரர் இருப்பதாக ஒப்புக்கொண்டு வழக்குரை அமைத்துள்ளார்கள்.

iii) மேற்படி வழக்குரையில் மனு சொத்திற்குள் எதிர்மனுதாரருக்கு பாத்தியம் இல்லாமல் இருப்பதால் அவர் உள்ளே நுழையக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளார்கள். அவ்வாறு இருக்கும் நிலையில் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா தடத்தை ஆக்கிரமித்து அவரது பூமியுடன் சேர்த்துகொண்டதாகவோ எந்தவொரு சங்கதிகளையும் கூறவில்லை. அவ்வாறு இருக்கும் நிலையில் தாவா தடத்தை தாலுக்கா சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யக்கோருவது எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி மனுதாரர் கோருவது போல் தாவா தடத்தை தாலுக்கா சர்வேயருடன் அளவீடு செய்வதால் இந்த வழக்கை தீர்மானிக்க நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் உதவாது. மனுதாரரே வழக்குரையில் மனுதாரர்கள் பூமியும் எதிர்மனுதாரர் பூமியும் தனித்தனி உட்பிரிவில் இருப்பதை ஒப்புக்கொண்ட நிலையில் ஆக்கிரமிப்பு என்ற சங்கதியே எழவில்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் 2016 (8) MLJ 368 B.Amutha Vs. Anandhi Sankara Narayanan, CRP (PD) No.2718/2012 and M.P.No.1/2012 T.Kanthasamy Vs. V.Periyathambi என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரைகளும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2017 (1) TNCJ 809 (Mad) (MB) A.Shanmugham Vs. M.Duraipandian and Others, 2014 (3) TNCJ 606 (Mad) (MB) V.Kamalam and another Vs. The Chairman, TamilNadu Bhoomithana Board, Panagal Building Chennai and others, 2017 (1) TNCJ 1035 (Mad) (MB) Bhoothanatha Pillai Vs. Manickavasagam Pillai and another, 2017 (1) TNCJ Sooriah Naickar and others Vs. Subbaiah என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா தடத்தில் அத்துமீறி நுழைந்து மனு/தாவா தடத்தின் வடபுறத்து மற்றும் மேல்புற நிலையான அத்துக்களை அழித்து கம்பிவேலி அமைக்க எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முயற்சி செய்தார்கள் என்றும் மனு/தாவா சொத்தில் மனுதாரர்கள்/வாதிகள் அமைதியான முறையில் ஆண்டனுபவித்து வருவதை இடைஞ்சல் செய்யும் வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யும் நடவடிக்கையை தடுக்கவும் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தும் வகையில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை

நியமித்து சர்வேயர் உதவியுடன் தாவா/மனு சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா தடத்தை ஆக்கிரமித்து அவரது பூமியுடன் சேர்த்துகொண்டதாகவோ எந்தவொரு சங்கதிகளையும் மனுதாரர்கள் கூறவில்லை என்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா தடத்தை தாலுக்கா சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யக்கோருவது எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தான தாவா ஏபிசிடி தடத்தை வாதிகள் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 03.01.2025 அன்று 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 20.02.2025 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து சர்வேயர் உதவியுடன் தாவா/மனு சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களான க.ச.எண்.886, 887, 882 ஆகிய பூமிகளின் மேல்புறம் மற்றும் வடபுறம் எதிர்மனுதாரர்களின் பூமியான க.ச.எண்.883 அமைந்துள்ளது என்பது தெரிய

வருகிறது. மனுதாரர்கள் தரப்பில் தாவா தடமான ஏபிசிடி தடம் க.ச.எண்.887, 886, 882 காலையில் நிலையான அத்துக்குள் கிழமேலாகவும் தென்வடலாகவும் அமைந்து மனுதாரர்களால் அனுபவம் செய்து வரப்படுகிறது என்றும் தாவா ஏபிசிடி தடத்தை ஆக்கிரமிப்பு செய்ய பிரதிவாதிகள் முயற்சி செய்தார்கள் என்றும் க.ச.எண்.886, 887, 882 பூமிகளில் எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாத்தியமும் அனுபவமும் இல்லை என்றும் சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்திற்கு வடபுறமும் மேல்புறமும் அமைந்துள்ள 1ம் எதிர்மனுதாரரின் பூமியான ரீ.ச.எண்.883/A5 பூமியின் தென்புறத்தில் கிழமேலாக கம்பிவேலி அமைத்தும் கிழபுறம் தென்வடலாக பாதி அளவிற்கு கம்பிவேலியும் மீதி கிழுவன்வேலியும் அமைத்தும் 1ம் எதிர்மனுதாரர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருவதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

8. மனுதாரர்கள் தரப்பில் கடந்த 10.09.2022 தேதியில் தாவா தடத்தின் வடபுற மற்றும் மேல்புற நிலையான அத்துக்களை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அழித்து கம்பிவேலி அமைக்க முயற்சி செய்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தாவா ஏபிசிடி தடத்தை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்குரையிலும் இம்மனுவிலும் மனுதாரர்கள் தரப்பில் சங்கதிகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும் தாவா ஏபிசிடி தடம் மனுதாரர்களின் பூமியான க.ச.எண்.882, 886, 887 காலைகளின் அத்திற்குள் அமைந்து மனுதாரர்களால் அனுபவம் செய்து வரப்படுகிறது என்ற சங்கதியானது மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கானது தாவா ஏபிசிடி தடத்தை பொறுத்து மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா ஏபிசிடி தடத்தை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு

செய்துள்ளதாக அசல் வழக்குரையிலும் இம்மனுவிலும் மனுதாரர்கள் தரப்பில் சங்கதிகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அத்தை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் அதற்காக நீதிமன்ற ஆணையரை இவ்வழக்கில் நியமனம் செய்து சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை.

9. மேலும் அசல் வழக்கானது தாவா ஏபிசிடி தடத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனு/தாவா சொத்தில் மனுதாரர்கள்/வாதிகள் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை இடைஞ்சல் செய்யும் வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யும் நடவடிக்கையை தடுக்கவும் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தும் வகையில் மேற்படி மனு/தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை. மேலும் இம்மனுவில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதற்கு மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்வித காரணங்களும் முன்னிடப்படவில்லை.

10. ஒரு வழக்கில் சாட்சியங்களை சேகரிக்கும் நோக்கத்திற்காக நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக்கூடாது என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தனது பல்வேறு முன்தீர்ப்புரைகளில் எடுத்து இயம்பியுள்ளது. தாவா ஏபிசிடி தடம் மனுதாரர்களின் சொத்துக்களில் அத்திற்குள் அமைந்து மனுதாரர்களால் அனுபவம் செய்து வரப்படுகிறது என்று மனுதாரர்கள் தரப்பில்

இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்ய வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அசல் வழக்கிற்கு சாட்சியங்களை சேகரிக்கும் நோக்கத்திலேயே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. உபயவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முன்தீர்ப்புரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. மேலும் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா ஏபிசிடி தடம் மனுதாரர்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்ற சங்கதியை மனுதாரர்கள் தங்களது தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் மூலம் தான் நிரூபணம் செய்ய வேண்டுமே தவிர நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கும்படியாக இல்லை. மேலும் உபய தரப்பினர்களுக்கிடையே அத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளதாகவும் எதிர்மனுதாரர்கள் தாவா ஏபிசிடி தடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படாத நிலையில் மற்றும் அசல் வழக்கானது 2022ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனுவானது அசல் வழக்கை மேற்கொண்டும் காலதாமதப்படுத்தவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. எனவே மேலே கண்ட பரிசீலனைகளின் அடிப்படையிலும் விவாதங்களின் அடிப்படையிலும் அசல் வழக்கானது தாவா சொத்தான ஏபிசிடி

தடத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா ஏபிசிடி தடத்தை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அசல் வழக்குரையிலும் இம்மனுவிலும் மனுதாரர்கள் தரப்பில் சங்கதிகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து சர்வேயர் உதவியுடன் மனு சொத்து அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை என்பதாலும் மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்ப்பதற்கு எவ்விதத்திலும் உதவியாக இருக்காது என்பதாலும் அசல் வழக்கில் சாட்சியங்களை சேகரிப்பதற்காகவும் அசல் வழக்கில் மேற்கொண்டு காலதாமதத்தை ஏற்படுத்துவதற்காகவும் மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.10.25 19:37:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.25 19:38:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.